# கரும்புக்கு நடுவே சாம்பார் வெள்ளரி ! உற்சாக வருமானம் தரும் ஊடுபயிர்



எந்த சாகுபடியாக இருந்தாலும், சரியான முறையில் ஊடுபயிர்களை நடவு செய்தால், கூடுதல் லாபத்தையும் பார்க்க முடியும்' என்பதுதான் விவசாய வல்லுநர்களின் ஏகோபித்த கருத்து!

இது உண்மைதான் என்பதை, தங்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப, விரும்பிய பயிர்களை உடுபயிர்களாக சாகுபடி செய்து, விவசாயிகள் பலரும் நிரூபித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களின் வரிசையில், சற்றே வித்தியாசமாக கரும்புக்கு இடையில் சாம்பார் வெள்ளரியைத் (சாம்பார், ஊறுகாய் என்று பயன்படுத்தப்படும் வெள்ளரி) தொடர்ந்து ஊடுபயிராக சாகுபடி செய்து வருகிறார், தேனீ மாவட்டம், குண்டல் நாயக்கன்பட்டி, 'கோடங்கி' முத்தையா.

கரும்புக் காட்டுக்குத் தண்ணீர் கட்டும் வேலையை செய்தபடியே நம்மிடம் பேசிய முத்தையா, "எனக்கு ஐம்பது வயதாகுதுங்க, பரம்பரை பரம்பரையா விவசாயம்தான். பிறந்ததுல இருந்து கழனிக் காட்டுக்குள்ளதான் இருக்கேன்.அதனால் எல்லா வெள்ளாமையும் எனக்கு அத்துபடி. மொத்தம் 18 ஏக்கர் இருக்கு. கொஞ்சம் சரளை கலந்த செம்மண் பூமி. அதோட, கிணத்துப் பாசனமும் இருக்கிறதால் முழுக்கவும் கரும்பு விவசாயம்தான். இப்போ சொட்டு நீரையும் போட்டுட்டேன். அதனால் தண்ணீர் செலவும் குறைந்துவிட்டது.

வட்டா வட்டம் கரும்பு விதைச்சதும், ஏதாவது காய்கறியை ஊடுபயிரா போட்டு விடுவேன். கரும்பு கணு வைக்க மூன்று மாதம் ஆகும். அதனால் மூன்று மாத பயிரை ஊடு வெள்ளாமை வைத்தோம்னா கணு வைப்பதற்குள் ஒரு லாபம் பார்த்துவிடலாம்.

கரும்புச் செலவை ஈடுகட்டும் ஊடுபயிர்!

பக்கத்துத் தோட்டத்துக்காரர் சாம்பார் வெள்ளரியை ஊடுபயிரா போட்டிருந்தார். அதைப் பார்த்து, இந்த வட்டம் கரும்பு போட்டவுடனே அதையே நானும் ஊடுபயிரா விதைத்து விட்டேன். இப்போதைக்கு இதுக்கு நல்ல விலை கிடைத்துக்கிட்டிருக்கு. அதுவுமில்லாமல் அதிக

பண்டுதமெல்லாம் கிடையாது. இரண்டு களை, இரண்டு மருந்து, இரண்டு உரம் அவ்வளவு தான். அருமையான மகசூல் கிடைத்துவிடும். கரும்புக்கான செலவெல்லாம் போக, லாபமும் கிடைத்துவிடும். கரும்பில் கிடைக்கிற காசு கூடுதல் போனஸ் மாதிரிதான்" என்றார்.

செம்மண் பூமியில் சாம்பார் வெள்ளரி நன்றாக வளரும். இதன் வயது 110 நாட்கள். தனிப்பிராகவும் செய்யலாம். நிலத்தை இரண்டு, மூன்று முறை நன்கு உழவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு பத்து மாட்டு வண்டி என்ற கணக்கில் தொழுவுரத்ரதக் கொட்டி இறைத்து, மீண்டும் ஒரு உழவு ஓட்ட வேண்டும். பிறகு, கரும்புக்கு எடுப்பது போல் நாம பாத்தி எடுத்து, சொட்டு நீர்க்குழாய்களை அமைத்து, கரும்பு விதைக் கரணைகளை நடவு செய்ய வேண்டும். பிறகு, பாத்திக்கு இருபுறமும் ஒன்றரை அடி இடைவெளியில் இரண்டிரண்டு விதைகளாக சாம்பார் வெள்ளரியை விதைத்து, ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கரும்பு விதைக் கரணைக்கு அருகில் கூட விதைக்கலாம். ஏக்கருக்கு 300 கிராம் விதைகள் தேவைப்படும்.

ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் சாம்பார் வெள்ளரி முளைத்து வரத் தொடங்கும். தொழுவுரம் போட்டிருப்பதால், களைகளும் வேகமாக முளைத்து வரும். 15 முதல் 20 நாட்களுக்குள் ஒரு முறை பூச்சிக்கொல்லி தெளித்து, முதல் களை எடுக்க வேண்டும். பிறகு, ஏக்கருக்கு 50 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றைத் தூவிவிட்டு, செழிப்பாகத் தண்ணீர் கட்ட வேண்டும். 30 முதல் 35 நாட்களுக்குள் மீண்டும் ஒரு முறை பூச்சிக்கொல்லி தெளித்து, இரண்டாம் களை எடுக்க வேண்டும். பின்பு, ஏக்கருக்கு 50 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றைத் தூவிவிட்டு. செழிம்பாகத் தண்ணீர் கட்ட வேண்டும். 30 முதல் 35 நாட்களுக்குள் மீண்டும் ஒரு முறை பூச்சிக் கொல்லி தெளித்து, இரண்டாம் களை எடுக்க வேண்டும். பின்பு, ஏக்கருக்கு 50 கிலோ என்ற கணக்கில் 17:17:17 கலப்பு உரத்தைத் தூவி செழிம்பாத் தண்ணீர் கட்ட வேண்டும்.

இதற்கு மேல் களை எடுக்கத் தேவை இருக்காது. வேறு உரமோ, பூச்சிக்கொல்லியோ தேவையில்லை. பயிரில் ஏதாவது பூச்சி, நோய் தாக்கியது தெரிந்தால் மட்டும் மருந்தடிக்க வேண்டும். ஊட்டம் குறைந்தால் மட்டும் உரமிட வேண்டும். 35 – ம் நாளுக்கு மேல் பூவெடுத்து, காய்க்க தொடங்கும். 60-ம் நாளிலிருந்து நன்றாக மகசூல் கொடுக்க ஆரம்பித்துவிடும். அடுத்த 50 நாட்கள் வரை அறுவடை செய்யலாம்.

வாரத்திற்கு இரண்டு பறிப்பு என 14 அல்லது 15 பறிப்புகள் வரும். முதல் நான்கு பறிப்புகளின் போது, தலா அரை டன் காய்கள் கிடைக்கும். அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு பறிப்புக்கும் ஒன்றரை டன் வரை காய்கள் கிடைக்கும். கடைசி நான்கைந்து பறிப்புகளில் காய்கள் கொஞ்சம் குறைவாகத்தான் கிடைக்கும். எப்படிப் பார்த்தாலும், 10 டன் முதல் 15 டன் வரை காய்கள் கிடைக்கும். சராசரியாக ஏக்கருக்கு 12 டன்னுக்குக் குறையாமல் கிடைக்கும். அறுவடை

முடிந்தவுடன் வெள்ளரிக் கொடிகளை அப்படியே நிலத்தில் போட்டுவிட்டால்.. மட்கி கரும்புக்கு உரமாகி விடும்.

சாகுபடி பாடத்தை முடித்த முத்தையா, வருமானம் பற்றிச் சொல்லத் தொடங்கினார். “சாம்பார் வெள்ளரிக்கு கேரளாவில் நல்ல கிராக்கி இருக்கிறது. அதனால் தோட்டத்திற்கே வந்து வியாபாரிகள் எடுத்துக்கிட்டுப் போயிடுவாங்க. எப்பவும் கிலோ அஞ்சு ருபாயிலிருந்து பத்து ரூபாய் வரைக்கும் விலை போகும். மத்த காய் மாதிரியே இதுக்கும் எப்பவாவது திடீர்னு விலை சரிஞ்சுடும். சந்தையில் வரத்து அதிகமாயிடுச்சுனா.. மூன்று ரூபாய்க்குக் கூட வந்திடும்.

இப்போ மார்க்கெட் நல்லா இருக்கிறதால் வியாபாரிங்க வந்து கான்ட்ராக்ட் (ஒப்பந்தம்) போட்டுக்கறராங்க. பதினெட்டு ஏக்கரில் விளைந்து நிக்கிற சாம்பார் வெள்ளரியை விட்டுட்டேன். அவங்களே ஆள் வைத்து அறுவடை பண்ணிக்குவாங்க. நான் கான்ட்ராக்ட் பேசினப் பொழுது கிலோ ஐந்து ரூபாய்க்குதான் போயிட்டிருந்தது.

அதனால், ஏக்கருக்கு இருபத்திரண்டாயிரம் ரூபாய்ங்கற கணக்கில் ஒப்பந்தம் போட்டேன். இதன்படி கணக்குப் போட்டால்.. செலவெல்லாம் போக, ஏக்கருக்கு சுமாரா 14 ஆயிரம் ரூபாய் கையில் நிற்கும். நாமே விற்றிருந்தா.. சராசரியா 10 டன் மகசூல்னு கணக்கு போட்டாலே கிலோ 6 ரூபாய் வீதம் 60 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். செலவு 15 ஆயிரம் ரூபாய்னு வைத்துக் கொண்டாலும், 45 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்” என்று சொன்னார் முத்தையா.

**தொடர்புக்கு**

முத்தையா,
அலைபேசி (செல்போன்) : 99527-71134